# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2257/19 - 2021 දෙසැම්බර් මස 06 වැනි සඳුදා - 2021.12.06

*2257/19 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**எல். டி. பி. 9/2013**

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*(460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் காணி அமைச்சரினால் ஆக்கப்பட்டு இலங்கை பாராளுமன்றத்தினால் 2021, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**எஸ். எம். சந்திரசேன,**
*காணி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, நவெம்பர் 30.*

**ஒழுங்குவிதிகள்**

*2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய 1864/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான 2013 ஆம் ஆண்டின் காணி எடுத்தற் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) அதன் (2) ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (வ) என்னும் உட்பந்தியில், "அதிவேக வீதி நீடிப்புக் கருத்திட்டம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிவேக வீதி நீடிப்புக் கருத்திட்டம்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;*


1A - G 35510 — 50 (2021/12)


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் (2) ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (வ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

“ (அஅ) வடமத்திய மஹா எல கருத்திட்டம்;

(i) வடமத்திய மஹா எல கருத்திட்டம் (யூஈசீ - ஐசீபி - 2ஏ) கோதுருவாவவிலிருந்து நாமல்புர வரை சுரங்க வழியினூடாகக் கால்வாயை நிர்மாணித்தல் - மொத்த நீளம் 28.09. கி. மீ.;

(ii) வடமத்திய மஹா எல கருத்திட்டம் (யூஈசீ - ஐசீபி - 3) கோங்கட்டிய வாவியிலிருந்து கோதுருவாவ வரை - மொத்த நீளம் 21.2 கி.மீ.;

(iii) வடமத்திய மஹா எல கருத்திட்டம் (யூஈசீ - ஐசீபி - 4) நாமல்புரவிலிருந்து யகல்ல வரை - மொத்த நீளம் 9.9 கி. மீ.;

(iv) வடமத்திய மஹா எல கருத்திட்டம் (யூஈசீ - ஐசீபி - 5) யகல்லவிலிருந்து எருவெவ மற்றும் மஹாகணதர ஓயா வரை - மொத்த நீளம் 29.9 கி. மீ.

(அஅ) தாழ்ந்த மல்வத்து ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்;
(அஇ) முந்தெனி ஆறு ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்;
(அஈ) குபுக்கன் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம்;
(அஉ) தல்பிட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம்;
(அஊ) கிரிந்தி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடி யேற்றக் கருத்திட்டம்;
(அஎ) பெத்தியாகொட உத்தேச இறைக்கும் நிலையத்தை நிர்மாணித்தல்;
(அஏ) எல்லேவெவ நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல்;
(அஐ) வேமெடில்ல நீர்த்தேக்கக் கருத்திட்டம்;
(அஒ) வெவ்பிட்டிய வாவியை நிர்மாணித்தல்;
(அஓ) தம்பவின்ன கருத்திட்டத்தின் பூனாவ வாவியின் கொள்ளளவை மேலுயர்த்துதல்;
(அஔ) ஹகிரில்ல வாவியை நிர்மாணித்தல்;
(அக) கிரம ஓய நீர்க்கால்வாயின் கழிமுகத்தை அகலமாக்குதல்;
(அங) ஹல்பாதொட்ட இயந்திரப் பொறியியல் வேலைத்தளங்களுடனும் அதன் அலுவலகத்துடனும் காணிகளைக் கொள்ளுதல்;
(அச) உந்துகொட பண்டார எல கருத்திட்டத்தின் மஹர பண்டாரவெவவின் பிரதான கால்வாய்;
(அஞ) மஹா ஓயா நீர்த்தேக்கம்;
(அட) சியபலங்கமுவ ஓயாவிலிருந்து மஹா கல்கமுவ வாவி வரை நீர்வாங்குதளக் கால்வாய்க் கருத்திட்டத்தை நிர்மாணித்தல்;
அத்துடன்
(அண) கிங் நில்வலா கருத்திட்டம்.”

EOG 12 - 0055

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.